**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை:- திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி**

**2024 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 4-ஆம், நாள் வியாழன்கிழமை**
**CNR No.TNTI12-000195-2014**
**EP No.11/2014**
**OS No.90/2007**

1.ஏ.பி.சுப்பு (இறப்பு) (2 முதல் 4 வரையிலான மனுதாரர்கள் இ.ம.எண்.826/2017, 15.06.2017 தேதிய உத்தரவுப்படி திருத்தப்பட்டுள்ளது.)

2.வள்ளியாத்தாள்

3.சந்திரன்

4.பாலன்

... மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்

**.. எதிர் ..**

முருகேசன்

...எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி

இம்மனு இறுதியாக 20.03.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக உத்தரவிடப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

நிறைவேற்று மனுவில் 7, 8 காலங்களில் கண்ட தொகைகளும் இனி மனு விஷயமாய் நேரிடும் சகல செலவுகளும் மேற்படி வீதம் பின் வட்டி சகிதம் மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரரால் கிடைக்கும் பொருட்டும் தொகை செல்லாகாத பட்சம் எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ் அனுப்பி தொகை செலுத்தாத பட்சம் செக்சன் 55–ன் CPC படி எதிர்மனுதாரரை சிவில் ஜெயில் அனுப்பி தொகை வசூல் செய்து தர வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 11(2)–ன்படி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு**:–

1ம் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், அவர் கடந்த 30.01.2015ம் தேதி இறந்துவிட்டதாகவும், அவரது வாரிசுதாரர்களாக 2 முதல் 4 வரையிலான மனுதாரர்கள் இந்த மனுவில் மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரருக்கு எதிராக தொடரப்பட்ட அசல் வழக்கு எண்.90/2007 கடந்த 01.03.2011–ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், தீர்ப்பாணைப்படி எதிர்மனுதாரர் தீர்ப்பாணை தொகையை மனுதாரர்களுக்கு திருப்பி செலுத்தவில்லை என்றும், எதிர்மனுதாரர் தீர்ப்பாணை தொகையை செலுத்தாதப்பட்சம் எதிர்மனுதாரரை கைது செய்து உரிமையியல் சிறையில் அடைக்க வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

3) எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினராக உத்தரவிடப்பட்டுள்ளார். மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் 4ம் மனுதாரர் எஸ்.பாலன் என்பவர் ம.சா.1 ஆக விசாரணை செய்து அவர் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் ஒரு கவியரசன் என்பவர் ம.சா.2 ஆக விசாரணை செய்து அவர் மூலமாக மூ.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

4) **<u>பிரச்சனை:–</u>** மனுதாரர்கள் கோரிய பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய விசயம் ஆகும்.

5) **<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

5.1.) அசல் வழக்கு எண்.90/2007–ஆனது 1வது மனுதாரரால் எதிர்மனுதாரருக்கு எதிராக தாவா தொகையை கோரி வழக்கு தொடரப்பட்டு அந்த அசல் வழக்கு 01.03.2011–ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பாணைக்கு எதிராக எதிர்மனுதாரர் மேல்முறையீடு செய்யவில்லை. 1ம் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு தொடரப்பட்டு நிலுவையில் இருந்த சமயத்தில் 1ம் மனுதாரர் கடந்த 30.01.2015 தேதியில் காலமாகிவிட்டார். அவரது இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.4 ஆகவும், வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரர் காலமாகிவிட்டதால் அவரது வாரிசுதாரர்களாக 2

முதல் 4 வரையிலான மனுதாரர்கள் இந்த மனுவினை தொடர்கிறார்கள்.

5.2.) மனுதாரர்கள் தரப்பில் 4வது மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் மூலமாக ம.சா.ஆ.1 தீர்ப்பாணை மற்றும் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள கணினி பட்டா ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.1-ன் சாட்சியத்தை ஒத்துரைத்து ஒரு கவியரசன் என்பவர் ம.சா.2 ஆக சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.1, 2 சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிர்மனுதாரருக்கு தொகை செலுத்த போதிய வசதி இருந்தும் தீர்ப்பாணை தொகை செலுத்தாமல் இருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். ம.சா.1 மூலமாக குறியீடு செய்யப்பட்ட ம.சா.ஆ.2 ஆவணத்தை கவனமாக பரிசீலிக்கையில் எதிர்மனுதாரர் பெயரில் சின்னாரிபாளையம் கிராமத்தில் காலை 139/1பி1 கூட்டாக இருப்பதை மனுதாரர்கள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பாணை தொகையானது ரூ.88,777/- ஆகும். அது வட்டியுடன் ரூ.1,47,830/- ஆகும். எதிர்மனுதாரர் பெயரில் ம.சா.ஆ.2 ஆவணப்படி சொத்து இருந்தும் மேற்கண்ட தொகையை தீர்ப்பாணைப்படி செலுத்த முன்வரவில்லை. எதிர்மனுதாரர் இத்தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. இத்தீர்ப்பாணையை நிறைவேற்ற மேலமை நீதிமன்றங்களில் தடை உத்தரவு எதுவும் இல்லை. மாண்புமிகு உச்சநீதிமன்றம் Rahul S.shah Vs Jinendira Kumar Gandhi 2021 SCC online SC 341, வழக்கில் வழங்கியுள்ள கருத்து செறிவுமிக்க வழிகாட்டுதல்களை இந்நீதிமன்றம்

கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில் எதிர்மனுதாரருக்கு போதிய வசதி இருந்தும் தீர்ப்பாணை தொகையை செலுத்த முன்வரவில்லை என்று இந்நீதிமன்றம் மன நிறைவடைகிறது. எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்க உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு செலவு தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது. எதிர்மனுதாரரை கைது செய்ய உத்தரவிடப்படுகிறது. கைது செய்ய படித்தொகை செலுத்த **அழைக்க 22.04.2024.**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 04.04.2024 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2024.04.04 20:16:46 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**<u>பிற்சேர்க்கை:-</u>**

**<u>மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-</u>**

ம.சா.1 - எஸ். பாலன் (4 ம் மனுதாரர்)

ம.சா.2 - கவியரசன் (3 ம் தரப்பினர்)

**<u>மனுதாரர்கள் தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 01.03.2011 | அசல் வழக்கு எண்.90/2007-ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.2 | 24.08.2021 | பட்டா எண்.612 க்கான கணினி பட்டா |
| ம.சா.ஆ.3 | 16.03.2015 | ஏ.பி.சுப்பு த/பெ.பொன்னுசாமிகவுண்டரின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் |
| ம.சா.ஆ.4 | 16.02.2015 | ஏ.பி.சுப்பு என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் |
| மூ.சா.ஆ.1 | | ம.சா.2–ன் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது) |

**எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–** இல்லை

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2024.04.04 20:16:53 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

EP No.11/2014
OS No.90/2007
Fair/Draft Order
Dated.04.04.2024
DMC, Avinashi